வெளியீட்டு எண் : 6
டிசம்பர் 15ஆம் தேதி 2005ஆம் ஆண்டு

# அரசுசாரா நிறுவன தகவல் இதழ்

பி.பொ.வ.கூ. அரசுசாரா நிறுவன தகவல் மற்றும் ஆவண அலுவலகம்
6 Chanda Sahib street, Pondicherry, 605 001 India
Telephone: +91 413 520 0606 Email: infoinde@ader-france.org

தென்னிந்தியாவில் அதிகமான தொண்டு நிறுவனங்கள் இருப்பதால் அவைகளுக்கு உதவி செய்யும் பொருட்டு (ADER-ASSOCIATION POUR LE DEVELOPPEMENT ECONOMIQUE REGIONAL) அதாவது, பி.பொ.வ.கூ. (பிராந்திய பெருளாதார வளர்ச்சி கூட்டமைப்பு) என்ற ஒரு பிரஞ்சு தொண்டு நிறுவனமும் மற்றும் FDF-(LA FONDATION DE FRANCE) அதாவது, பி.த.ஸ். (பிரன்ச் தர்ம ஸ்தாபனம்) என்ற ஒரு பிரன்ச் தொண்டு நிறுவனமும் இணைந்து துவக்கிய அரசுசாரா நிறுவன தகவல் அலுவலகத்தை பி.பொ.வ.கூ. புதுவையில் நடத்திவருகிறது. இந்த அலுவலகம் சுனாமி சம்மந்தமான அனைத்து தகவல்களையும் பெற்று, தயார் செய்து தகவல் மடலாக மாதம் இரு முறை தமிழ், ஆங்கிலம் மற்றும் பிரன்ச் மொழிகளில் வெளியிடுகிறது.

## உள்ளடக்கம்

- இரு வார செய்திகளின் தொகுப்பு
  - கல்வி
  - பருவ மழை மற்றும் வெள்ளம்
  - மறுகட்டுமானம்
  - நிவாரணம் மற்றும் புனரமைப்பு
  - ஆய்வு
- புதிய ஆன் லைன் வளங்கள்
- நிகழ்வுகளின்
- இணைப்பு : கட்டுமான பொருட்களின் மதிப்பீட்டு பட்டியல்

## இருவார செய்திகளின் தொகுப்பு

கடந்த சில மாதங்களாக பருவமழையால் ஏற்பட்ட வெள்ளம் மற்றும் அது சம்மந்தமான செய்திகளால், சுனாமிசம்மந்தமான செய்திகள் பின்னுக்கு தள்ளப்பட்டது. தற்போது, சுனாமியின் முதலாம் ஆண்டு நிரைவை ஒட்டிய செய்திகளே வந்துகொண்டு இருக்கின்றன. இதில் சுனாமி ஏற்பட்டதில் இருந்து தற்போது வரை செய்து கொண்டிருக்கும் தடுப்பு மற்றும் புனரமைப்பு வேலைகளும் அடங்கும்.

முதலாம் ஆண்டு நினைவிற்கு முன்னதாக பல புதிய திட்டங்கள் அறிவிக்கப்பட்டு கொண்டு இருக்கின்றன, குறிப்பாக மத்திய அரசு மற்றும் இந்திய சேவா சங்கம்.

பல இயற்கை சீற்றங்களை சந்தித்ததின் விளைவாக பேரிடர் மேலாண்மை நடவடிக்கைகளுக்கு முக்கியத்தும் கொடுக்கப்பட்டிருக்கிறது. சுனாமி மருசிறமைப்பு நடவடிக்கையால் ஏற்பட்ட உந்துதலினால் புதிய பேரிடர் மேலாண்மை கொள்கை அமைக்கப்பட்டு மத்திய அரசால் ஒப்புதல் வழங்கப்பட்டது.

இதனிடையில், மறுகட்டுமானம் தொடர்ந்து நடைபெற்றுவருகிறது. இருப்பினும் எதிர்பார்த்ததைவிட மிகவும் மெதுவாகவே வேலை நடக்கிறது. தற்போது ஏற்பட்ட வெள்ளம் காரணமாக பல வேலைகள் ஸ்தம்பித்து சுனாமி ஏற்பட்டு ஏறத்தாழ 1 வருடம் ஆகியும் சில பாதிக்கப்பட்ட குடும்பங்களுக்கு மட்டுமே நிரந்தர வீடுகள் கிடைத்துள்ளது.

# கல்வி

**புதுவை**

*சுனாமியால் பாதிக்கப்பட்ட பள்ளி மாணவர்களுக்கு கட்டணம் இரத்து செய்ய கோரிக்கை.*

ஆகிய இந்திய மின் தொழிலாளர் கூட்டமைப்பு சுனாமியால் பாதிக்கப்பட்ட தனியார் பள்ளி மாணவர்களுக்கு கட்டணத்தை ரத்து செய்ய தேவையான சட்டத்தை நிறைவேற்ற வேண்டும் என்று அரசை வற்புறுத்தி கேட்டுக்கொண்டது. புதுவை அரசு சுனாமியால் பாதித்த தனியார் பள்ளியில் படிக்கும் மாணவர்களின் பிள்ளைகளுக்கு பள்ளி கட்டணத்தை அரசே செலுத்தும் என்று அறிவிக்கப்பட்டது. சுனாமி ஏற்பட்டு 10 மாதங்களாகியும் இதுவரை எந்த ஒரு அரசாணையும் பிறபிக்கவில்லை. உடனே இதற்கு நடவடிக்கை எடுக்க வேண்டும் என்று முதல்வர் திரு. இரங்கசாமியிடம் இக்கூட்டமைப்பு ஓர் அறிக்கையில் வலியுறுத்தி உள்ளது,

ஆதாரம் : See The New Indian Express print version, 06-12-05

# பருவமழை மற்றும் வெள்ளம்

*கார்கில் நகரில் புதிய குடியிருப்பில் வெள்ளம்*

சென்னை மற்றும் தமிழ்நாட்டில் பெய்த கன மழையால் வடசென்னையில் மீண்டும் ஒருமுறை சுனமாமியால்பாதிக்கப்பட்டு தற்காலிக குடியிருப்பில் வசிப்பவர்கள் இடம் பெயர்ந்தனர்.

மழையால் இரானாவுரின் மூன்று கால வீடுகள் வெள்ளத்தில் மூழ்கின சுனாமி ஏற்பட்டு ஒரு வருடத்தில் பல குடும்பத்தினர் இவ்வாறு இடம் பெயர்வது நான்கு அல்லது ஐந்தாவது முறையாகும்.

இரானாவுரின், மறுகுடியிருப்பு புதிதாகக் கட்டப்பட்டது. மூன்றில் ஒரு பகுதி புதிய குடியிருப்பில் பாதிக்கும் மேற்பட்ட வீடுகள் இடுப்பு அளவு தண்ணீரில் மூழ்கியது. மற்றும் மக்கள் மீண்டும் ஒரு முறை அப்புறப்படுத்தப்பட்டனர். அவர்கள் மேடான பகுதியில் தங்கவைக்கப்பட்டனர், சிலர் தங்கள் உறவினர்களின் வீடுகளில் தஞ்சம் புகுந்தனர். (இந்திய டிசாஸ்டர், 10 டிசம்பர், 2005).

ஆதாரம் : http://www.indiadisasters.org/update/

கடலோர தரைப்பாலம் போக்கு வரத்திற்கு திறப்பு—நாளக கடலோர கிராமங்களான அக்கரைப்பட்டி மற்றும் கல்லறையை இணைக்கும் தரைப்பாலம் கடுவையாறு குறுக்கே கட்டப்பட்டுள்ளது. இது சமிபத்தில் பெய்த கன மழையால் ஏற்பட்ட வெள்ளத்தில் உடைந்தது. அது புனரமைக்கப்பட்டு ஞாயிறு அன்று பொது மக்களுக்கு வாகனங்களுக்கும் திறக்கப்பட்டது. மக்கள் படகுகள் மூலமாகவே ஆற்றை கடந்து சென்று கொண்டிருந்தனர்.

ஆதாரம் : http://www.hindu.com/2005/12/05/stories/2005120502250300.htm

நாகப்பட்டினம் மாவட்டத்தில் 87,000 ஹக்டேர் நெற்பயிர்கள் பாதிப்பு
நாகப்பட்டினம் மாவட்டம் காவேரி கரையோர பகுதிகளின் 87,000 ஹக்டேர் அளவிளான நெற்பயிர்கள் முழுவதும் சமீபத்தில் பெய்த கன மழை மற்றும் வெள்ளத்தால்சேதம் அடைந்துவிட்டது, என்று திரு. ஜக்மோகன் சிங் ரஜீபு, விவசாய ஆணையர் டிசம்பர் 7ஆம் தேதி கூறினார்.
ஆதாரம் : http://www.hindu.com/2005/12/07/stories/2005120708920300.htm

திரு. இராதாகிருஷ்ணன் கூறுகையில் மாவட்டத்தில் சுனாமியால் பாதிக்கப்பட்ட பகுதியில் விவய்ாயிகளுக்கு 1.25 கோடி ரூபாய் நஷ்டம். பாதிக்கக்பபட்ட பகுதியில் விவசாயிகளுக்கு 1.25 கோடி

ரூபாய் நஷ்ட ஈடாக கொடுக்கப்பட்டுள்ளது. மேலும் 4,300 ஹக்டேர் விவசாய நிலங்கள் சுனாமியில் உப்பு மண் படிந்தது, அவற்றில் 3,200 ஹக்டேர் விவாசாய நிலங்கள் மறுசிரமைக்கப்பட்டு நெல் மற்றும் இதர பயிர்கள் பயிரிடப்பட்டது.

வெள்ளத்தை தேசிய பேரழிவாக அறிவிக்க வேண்டும் விடுதலை சிறுத்தை தலைவர் கோரிக்கை.

தமிழ்நாட்டில் உள்ள 30 மாவட்டங்களிள் 22 மாவட்டங்களில் சமீபத்தில் வெள்ளத்தால் பாதிக்கப்பட்டுள்ளது. எனவே மத்திய அரசு தேசிய பேரழிவாக அறிவிக்க வேண்டும் எனறு விடுதலை சிறுத்தை அமைப்பின் தலைவர் கோட்டுக்கொண்டார்.

சேதத்தை வைத்து பார்க்கும் பொழுது, வெள்ளத்தால் பயிர்கள் மற்றும் உடமைகளுக்கும் ஏற்றப்பட்ட பாதிப்பு, சுனாமியை காட்டிலும் அதிகம். இந்த பேரழிவால் பாதிக்கப்பட்ட மாவட்டங்களில் நிவாரணம் கொடுப்பது மட்டுமின்றி புனரமைப்பு மற்றும் மறுகட்டுமானப் பணியில் மாநில அரசு பல்வேறு பிரச்சனைகளை எதிர்நோக்கியுள்ளது.

மேலும் இவர் கூறுகையில், மாநில அரசு தொண்டு நிறுவணங்களுடன் ஒப்பந்தம் செய்து புணரமைப்பு பணிகளை மேற்கொள்ள வேண்டும் என்றார்.

மழையால் பாதிக்கபட்ட ஏக்கர் ஒன்றுக்கு ரூபாய் 16,000மும் முடிவதும் சேதம் அடைந்த வீட்டிற்கு ரூபாய் 10,000மும் மற்றும் பாதுகாப்பான வீடுகள் கொடுக்க வேண்டும் என்று விடுதலை சிறுத்தை அமைப்பு கேட்டுக்கொண்டுள்ளது.

ஆதாரம் : http://www.hindu.com/2005/12/13/stories/2005121302640300.htm

## மறுகட்டுமானம்

நாக்ப்பட்டினம் மாவட்டத்தின் மொத்தம் 20,000 நிரந்தர விடுகள் கட்டப்படிருக்கிறது என்று மாவட்ட ஆச்சியர் திரு. இராதகிருஷ்ணன் கூறினார். 2000க்கு மேற்பட்ட நிரந்தர வீடுகள் மாவட்டத்தின் பல்வேறு இடங்களின் முடியும் தருவாயின் உள்ளது அவைகள் சுனாமியால் பாதிக்கப்பட்டவர்களுக்கு முதலாம் ஆண்டு நிறைவின் பொழுது கொடுக்கப்படும். 79 இடங்களின் மிதம் உள்ள விடுகளின் கட்டுமான வேலை விரைவாக நடக்கிறது. மார்ச் மாதம் 2006 ஆம் ஆண்டுக்குள் நிரந்தர விடுகள் கட்டுமாக பணி முடிக்கப்பட கூடும் என்று கூறினார்.

அஃர் மேலும் கூறுகையில் சுனாமியால் உயிரிழந்தவர்களுக்கு நாக்பப்பட்டின மாட்டத்தில் இரண்டு இடங்களின் நினைவு சின்னஙகள் அமைக்கப்பட்டிருக்கிறது. அவை டிசம்பர் 26ஆம் தேதி திற்கக்ப்பட இருக்கிறது. மீனவ சமூதாயத்தினரின் வாழ்க்கை தரம் சுனாமிக்கு பின் குறிப்பிடத்தக்க வகையில் உயர்ந்துள்ளது என்றும் திரு இராதாகிருஷ்னன் கூறினார்.

ஆதாரம்:http://www.newindpress.com/NewsItems.asp?ID=IET20051208012210&Page=T&Title=Southern+News+%2D+Tamil+Nadu&Topic=0&

*புதுவை மறுகட்டமைப்பு பணிகளின் தற்போதைய நிலை*

புதுவை மற்றும் காரைக்காலில் 21 குடியிருப்பு பகுதிகளின் மறுகட்டுமான பணி மேற்கொள்ள புதுவை அரசு 13 ஒப்பந்தங்கள் 12 தொண்டு நிறுவனங்களும், மகாராஷ்டிரா அரசுடன் கைகோத்து இருக்கின்றன. சுனாமியால் பாதித்த குடும்பத்தனர்களுக்கு 4,947 வீடுகள் கட்ட திட்டமிட்டுள்ளது. கரைக்கால் பகுதியில் உள்ள தாழ்வான இடங்களின், திட்ட செயலாக்க முகமையில் மணல் நிரப்பும் வேலை உலக வங்கியின் நிதியுடன் செயல்படுத்தப்பட்டுவிடுகிறது.

ஆதாரம் : The New Indian Express print version, 11-12-2005.

*சுனாமியால் பாதித்த பலர் இன்றும் வீடின்றி தவிப்பு பிரிட்ஸ் அறிக்கை.*

ஓர் கணக்கெடுப்பின்படி, இந்திய பெருங்கடலின் சுனாமி தாக்கி ஏறத்தாழ ஒரு வருடம் ஆகியும் பெரும்பாலான கிராமங்களில் வாழும் மக்கள் இன்னும் தற்காலிக குடியிருப்புகள் அல்லது முகாம்களிலேயே பாதிக்கப்பட்ட மக்கள் இன்னும் தற்காலிக குடியிருப்பு அல்லது முகாம்களில் அரசு மற்றும் தொண்டு நிறுவனங்களின் உதவியுல்ன் வாழ்ந்து வருகின்றனர். இந்தியாவில் 92 சதவீதமும் இலங்கையில் 78 சதவித மக்களின் நிலையும் இதுதான் என்று ஆய்வு தெரிவிக்கிறது.

ஆதாரம் : http://www.alertnet.org/thenews/newsdesk/NC5235480.htm

## நிவாரணம் மற்றும் புனரமைப்பு

*மத்திய அரசு ரூ 2,347.19 கோடியை சுனாமி தொகுப்பு நிவாரணமாக வழங்கியுள்ளது.*

மத்திய அமைச்சர் திரு. ப. சிதம்பரம் தமிழ்நாட்டில் சுனாமியால் பாதித்த பகுதிகளுக்கு தொகுப்பு நிவாரணமாக ரூபாய் 2,347.19 கோடி வழங்கியுள்ளது, என்றார். இது ஆசிய வளர்ச்சி வங்கி மற்றும் உலக வங்கியிடம் இருந்து கடனாக பெற்றது. தமிழ் நாட்டில் புனரமைப்பிற்காக ஒட்டு மொத்த சுனாமி நிவாரணமாக ரூபாய 4,025.56 கோடியாக இருக்கும் என்று புதுதில்லியில் செய்தியாளர்க்ள கூட்டத்தில் தெரிவித்தார்.

தமிழ்நாடு முதல்வர் ஜெ. ஜெயலலிதா, தனது சமீபத்திய அறிக்கையில் மத்திய அரசு இது வரை தமிழ்நாட்டிற்கு வெறும் 679.61 கோடி ரூபாய் மட்டுமே சுனாமி நிவாரணமாக கொடுத்துள்ளது என்றார் இதுவரை உலகவங்கியிடம் இருந்து ரூபாய் 1,909.68 கோடி, ஆகிய வளர்ச்சி வங்கியிடம் முதல் தவனையாக 388.51 கோடியுடன் 637.29 கோடி வெளியில் இருந்து பெறப்பட்ட உதவியாகும். மொத்தமாக வெளியில் இருந்தும் பெறப்பட்ட உதவி தொகை ரூபாய் 2,678.37 கோடியாகும் என்று அறிக்கையில் மேலும் கூறிப்பிட்டுள்ளார்.

ஆதாரம் : http://www.hindu.com/2005/12/10/stories/2005121016170600.htm

*இந்திய சேவா சங்கம் புனரமைப்பிற்காக ரூபாய் 10.89 கோடியை வழங்கியுள்ளது.*

இந்திய சேவா சங்கம் தமிழ்நாட்டில் சுனாமி பாதித்த மாவட்டங்களின் புனரமைப்பு திட்டத்திற்காக ரூபாய் 10.89 கோடியை வழங்கியுள்ளது. இதில் ரூபாய் 6.89 கோடி கடலூர், நாகை, திருவாரூர், தஞ்சை மற்றும் புதுக்கோட்டை மாவட்டத்திற்காக ஒதுக்கப்பட்டுள்ளது.

இவற்றில் நாகை மாவட்டம் கடுமையாக பாதிக்கப்பட்ட மாவட்டமாகும், அதில் 76 சதவிகிதம் உயிரிழப்பு ஏற்பட்டது அதை தொடர்ந்து கன்னியாக்குமரி மற்றும் கடலூர் மாவட்டங்கள் அதிகம் பாதித்த மாவட்டங்களாகும்.

இத்தொகையில் சுனாமி பாதித்த இடங்களில் பள்ளிக்கட்டிடங்கள், பல்நோக்கு சேவை மைய கட்டிடங்கள், குளிர்பதன சேமிப்பு கிடங்கு மற்றும் ஐஸ் கட்டி தயாரிக்கும் தொழிற்சாலைகள், கருவாடு உலர்த்தும் மேடைகள், கழிவு நீர் சுத்திகரிப்பு நிலையங்கள், மீன்களை ஏற்றி செல்லும் டெம்போ வாகனங்கள் மற்றும் குழந்தை மையங்கள் கட்டுவதற்காக இந்த பணம் செலவு செய்யப்படும்.

ஆதாரம்:http://www.newindpress.com/NewsItems.asp?ID=IET20051210021906&Page=T&Title=Southern+News+%2D+Tamil+Nadu&Topic=0&

*சுனாமியால் பாதிக்கப்பட்டவர்களுக்கு பொது விநியோக அட்டை*

சுனாமியால் பாதிக்கப்பட்ட மக்கள் தங்கள் தற்காலிக குடும்ப அட்டையை டிசம்பர் மாதம் 16ம் தேதிக்குள் துணை ஆணையர் அலுவலகத்தில் (பொது விநியோகம்) முறையான விண்ணப்பத்தை செலுத்தி புதிய குடும்ப அட்டையை பெற்றுக்கொள்ளலாம் என்று அறிவிக்கப்பட்டுள்ளது.

தமிழ்நாட்டில், சுனாமியால் பாதித்த கடலோர மாவட்டங்களின் தற்காலிக குடும்ப அட்டை வழங்கப்பட்டது. அப்போது இந்த அட்டை ஆறு மாதங்கள் பயன்படுத்திக்கொள்ளலாம் அல்லது புதிய அட்டை தரும் வரையில் பயன்படுத்தி கொள்ளலாம் என்று அறிவிக்கப்பட்டிருந்தது.

ஆதாரம்:http://www.newindpress.com/NewsItems.asp?ID=IE920051213235252&Page=9&Title=Chennai&Topic=0&

## ஆய்வு

*சுனாமி ஆராய்ச்சிகளுக்கு தூண்டுகோலாகவும், தேவைகளை வெளி கொண்டு வருவதாகவும் உள்ளது என்று விஞ்ஞானிகள் கூறுகின்றனர்.*

இந்திய பெருங்கடலில் கடந்த ஆண்டு ஏற்பட்ட சுனாமி போன்ற பேரழிவுகள் விஞ்ஞானிகளுக்கும், ஆராய்ச்சியாளர்களுக்கும் தூண்டுகோலாக அமைந்திருக்கிறது. நிபுணர்கள், அதிககவனம் செலுத்தி எதிர்கால சவால்களை சந்திக்கும் வகையில் ஆய்வு பணிகளை மேற்கொள்ள வேண்டும்.

தற்போது அதிக கவனம் செலுத்தி வருவது முன்னெச்சரிக்கை முறைகள் மற்றும் மக்களை அச்சமையத்தில் வெளியேற்றுவது போன்றவையாகும ஆனால், நடைமுறையில் எவ்வாறு அனைவரையும் ஒரே சமயத்தில் வெளியேற்ற முடியும் என்ற கேள்வியும் எழுந்துள்ளது.

இத்துறையில் ஆராய்ச்சி மற்றும் ஆய்வு செய்ய கடந்த ஆண்டு ஏற்பட்ட சுனாமி மாணவர்கள் மத்தியில் அதிக ஆர்வத்தை ஏற்படுத்தியுள்ளது. இதை பயன்படுத்தி எதிர்காலத்தில் திறமையான விஞ்ஞானிகளை உருவாக்கி இதுபோன்ற பேரழிவிலிருந்து பாதுகாத்துக் கொள்ள முயற்சிகள் மேற்கொள்ளப்படும் என்று எஸ். ஓ.யு நிபுணர்கள் கூறினர்.

ஆதாரம் : http://www.hindustantimes.com/news/181_1564383,0004.htm

## புதிய ஆன்லைன் வளங்கள்

- தமிழ்நாடு அரசு சுனாமி சம்மந்தமான தற்போதைய நிலவரத்தை தனது இணையதளத்தில் நவம்பர் மாதம் 22ஆம் தேதி அன்று வெளியிட்டுள்ளது. இதை பின்வரும் இணையதளத்தில் காணலாம். http://www.tn.gov.in/tsunami/tsunami-relief.htm

- வெள்ள நிலவரம் பற்றிய அறிக்கை 1 மற்றும் 2ஐ தமிழ்நாடு சுனாமி வள மையத்தின் (TNTRC) இணையதளத்தில் காணலாம்.
  http://www.tntrc.org/downloads/Flood_Report1_28Nov05.pdf
  http://www.tntrc.org/downloads/Flood_Report2_28Nov05.pdf

- டிரைநட்(TRINet) தனது இணையதளத்தில் " பேரழிவு நிவாரணம் மற்றும் குறைப்பு ஒருங்கிணைப்பு கூட்டம் : இந்த பாடத்தில் இருந்து திட்டதந்திரம்" என்ற தலைப்பில் காணலாம். http://www.trinet.in/downloads/1decrep.htm

- டிரைநட் (TRINet) இணையத்தளம் "தொழில்நுட்பம் மற்றும் சென்னை மாவட்டத்திற்கு கட்டுமான தந்திரங்கள்" என்ற தலைப்பில் ஆவணம் ஒன்றை வெளியிட்டு உள்ளது. http://www.trinet.in/downloads/28novsdrep.htm

- பிரட்ஸ் ஸ்தாபனம் சிறப்பான ஓர் அறிக்கையை "நற்பயனளிக்கும் உதவி பெற்றவரின் புலப்பாடு : சுனாமி மீட்பு, நிவாரணம் மற்றும் புனரமைப்பில் இந்தோனேசியா, இந்தியா மற்றும் இலங்கை" என்ற தலைப்பில் வெளியிட்டுள்ளது. http://www.trinet.in/downloads/28novsdrep.htm

## நிகழ்வுகளின் பட்டியல் :

| நிகழ்வுகள் | அமைப்பாளர் | தேதி / காலம் | இடம் |
|---|---|---|---|
| **Exhibition:** The first anniversary of the tsunami disaster | TRINet & TNTRC Contact: tamil.kumar@tntrc.org info.trinet@gmail.com | 19-12-05 to 20-12-05 | Chennai, TamilNadu. |
| **Seminar:** International Conference on Disaster Management and Trauma Counselling | Sudha Bhogle at bangaloreuniversity@counsellor.com | 21-12-05 to 22-12-05 | Bangalore, Karnataka. |

## தொடர்புகொள்ள வேண்டிய முகவரி :

### புதுவை

| | |
|---|---|
| Laurent Tyers<br>Information Officer<br>Tel. +91 413 520 0606<br>Mobile : +91 98946 80458<br>Email : infoinde@ader-france.org | M. Muruganadam<br>Assistant Information Officer<br>Tel. +91 413 520 0606<br>Mobile : +91 98946 22240<br>Email : infoinde@ader-france.org |

### பிரான்சு

| | |
|---|---|
| **ADER** : Association pour le Développement Economique Régional<br>Gionata Simioni,<br>Programme Manager<br>31 Rue de Reuilly, 75012 Paris - France<br>Tel. +33 1 40 24 03 03<br>Fax: +33 1 40 24 09 77<br>Email: contact@ader-france.org | **FdF** :Fondation de France<br>Martin Spitz,<br>Programme Manager :<br>Email: martin.spitz@fdf.org<br>Estelle Hédouin,<br>Programme Information Manager:<br>Email: estelle.hedouin@fdf.org |

## இணைப்பு : தமிழ்நாட்டில் கட்டுமான பொருள்களின் விலை மதிப்பீட்டு பட்டியல்

குறிப்பு : பின்வரும் தகவல்கள் சென்னை, புதுவை மற்றும் தஞ்சாவுர், நாகப்பட்டினம் உட்பட கடடுமான பொருள்கள் தமிழநாட்டின் கடலோரப் பகுதியில் பல்வேறு இடங்களில் உள்ள விலை விபரங்களை தெரிந்துகொள்ளவும், ஜனவரி மாதத்தில் இருந்து இப்போது வரை ஏற்ப்பட்டுள்ள விலை மாற்றங்களை பற்றி அறிய உதவும்.

### சென்னையில் கட்டுமான பொருள்களின் விலை மதிப்பீட்டு பட்டியல்

| பொருள் | ஜனவரி முதல் வாரம் 2005 | ஜீலை முதல் வாரம் 2005 | அக்டோபர் முதல் வாரம் 2005 | % விலை மற்றம் ஜனவரி– அக்டோபர் 2005 |
|---|---|---|---|---|
| CEMENT: *Rupees per pack* | | | | |
| BIRLA SUPER | 165.00 | 165.00 | 165.50 | + 0.3% |
| ULTRATECH | 157.50 | 170.00 | 163.75 | + 4% |
| ACC 43 | 160.00 | 165.00 | 160.50 | + 0.3% |
| ACC 53 | 164.00 | 165.00 | 160.00 | - 2% |
| RAJASTRI | 150.00 | 160.00 | 157.50 | + 5% |
| Reinforcement Steels – *Rupees per kilogramme* | | | | |
| 8 MM STEEL | 27.00 | 55.00 | 31.00 | + 13% |
| 10 MM STEEL | 27.50 | 55.00 | 30.50 | + 10% |
| 12 MM STEEL | 27.00 | 55.10 | 31.50 | + 14% |
| 16 MM STEEL | 27.00 | 55.00 | 31.50 | + 14% |
| 20 MM STEEL | 27.50 | 55.00 | 31.50 | + 13% |
| 25 MM STEEL | 27.50 | 55.50 | 29.00 | + 5% |
| ¾ GRAVEL (JELLY) *3 units** | 5400 | 5400 | 7500 | + 28% |
| 11/2 GRAVEL *3 units* | 4500 | 4800 | 7500 | + 40% |
| BURNED BRICKS *3000 Nos.* | 7500 | 6000 | 5500 | - 37% |
| RIVERSAND *3 units* | 2600 | 2500 | 2500 | - 4% |

* 3 யூனிட்டுகள் ஒரு லோடு லாரிக்கு சமமாகும்

ஆதாரம் : சென்னையில் கட்டுமான பொருள்களின் பட்டியல், கட்டுமான தொழில் பதிப்பகம்.

**புதுவையில் கட்டுமான பொருள்களின் விலை மதிப்பீட்டு பட்டியல்**

| பொருள் | ஜனவரி முதல் வாரம் 2005 | ஜீலை முதல் வாரம் 2005 | அக்டோபர் முதல் வாரம் 2005 | % விலை மற்றும் ஜனவரி– அக்டோபர் 2005 |
|---|---|---|---|---|
| *Cements: Rupees per pack* | | | | |
| COROMANDL | 165.00 | 158.00 | 153.00 | - 8% |
| ULTRATECH | 165.00 | 158.00 | 153.00 | - 8% |
| ZUARI | 152.00 | 158.00 | 147.00 | - 3% |
| RAMCO | 153.00 | 153.00 | 145.00 | - 5% |
| BIRLAPLUS | 158.00 | 158.00 | 148.00 | - 7% |
| ARASU | 145.00 | 143.00 | 143.00 | - 1% |
| Reinforcement Steels – *Rupees per kilogramme* | | | | |
| 8 MM STEEL | 25.60 | 26.70 | 24.50 | - 4% |
| 10 MM STEEL | 25.20 | 26.10 | 24.00 | - 5% |
| 12 MM STEEL | 25.20 | 26.10 | 24.00 | - 5% |
| 16 MM STEEL | 28.00 | 29.90 | 27.10 | - 3% |
| 20 MM STEEL | 27.50 | 29.60 | 26.50 | - 4% |
| 25 MM STEEL | 27.50 | 29.60 | 26.80 | - 3% |
| ¾ GRAVEL (JELLY) *3 units* | 5100 | 5400 | 5400 | + 6% |
| 11/2 GRAVEL *3 units* | 4100 | 4100 | 4400 | + 7% |
| BURNED BRICKS(4000) *4000 Nos.* | 7200 | 6800 | 6700 | - 7% |
| RIVERSAND *3 units* | 1600 | 1600 | 1800 | + 11% |

**ஆதாரம் :** புதுவை கூட்டுறவு கட்டிட மையம்

## தஞ்சாவூரில் கட்டுமான பொருள்களின் விலை மதிப்பீட்டு பட்டியல்

| பொருள் | ஜனவரி முதல் வாரம் 2005 | ஜீலை முதல் வாரம் 2005 | அக்டோபர் முதல் வாரம் 2005 | % விலை மற்றம் ஜனவரி– அக்டோபர் 2005 |
|---|---|---|---|---|
| Cements: *Rupees per pack* | | | | |
| RAMCOSUPER | 165.00 | 150.00 | 152.00 | - 9% |
| BIRLA PLUS | 163.00 | 148.00 | 150.00 | - 9% |
| DALMIA | 163.00 | 152.00 | 155.00 | - 5% |
| Reinforcement Steels – *Rupees per kilogramme* | | | | |
| 8 MM STEEL | 29.10 | 25.00 | 25.00 | - 16% |
| 10 MM STEEL | 28.60 | 26.00 | 26.00 | - 10% |
| 12 MM STEEL | 28.60 | 26.00 | 26.00 | - 10% |
| 16 MM STEEL | 28.60 | 26.00 | 26.00 | - 10% |
| 20 MM STEEL | 28.60 | 26.00 | 26.00 | - 10% |
| 25 MM STEEL | 28.60 | 26.00 | 26.00 | - 10% |
| ¾ GRAVEL (JELLY) *3 units* | 4500 | 4700 | 5000 | + 10% |
| 11/2 GRAVEL *3 units* | 3600 | 3800 | 4200 | + 14% |
| BURNED BRICKS(4000) *4000 Nos.* | 5200 | 5400 | 5600 | + 7% |
| RIVERSAND *3 units* | 1850 | 2400 | 3000 | + 38% |

**ஆதாரம் :** இந்திய கட்டிடம் கட்டுபவர்கள் கூட்டமைப்பு, தஞ்சாவூர் மையம்.

---


**மொழி பெயர்ப்பு**
திரு. ம. முருகானந்தம்
மின் அஞ்சல் : infoinde@ader-france.org

**இலக்கணம் மற்றும் பிழைதிருத்தம்**
திரு. மு. கணே

**ஆக்கம்:**
திரு. ச. சோழன்
தொலைபேசி : +91–(0) 9994208811
மின்அஞ்சல் : sozhan6@sify.com